உ

சிவமயம்

சுன்னுக வாசரும்,

இலங்கை அரசாங்கப் பொதுசன சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும்,

சுன்னுகம்

தவஸ்ரீ செல்லாச்சியம்மையாரினது

ஏக புத்திரனுமாகிய

# திரு. த. சி. முதலியார்

**(T. S. Mudaliyar)**

அவர்கள்


சிவபதம் அடைந்ததை முன்னிட்டு

வெளியிடப்படும்

# நினைவு மலர்

சௌமிய சித்திரை 20

2-5-1969



திரு. த. சி. முதலியார் அவர்கள்
(T. S. MUDALIYAR)

தோற்றம்: 3–9–1891 மறைவு: 3–4–1969

சிவமயம்

# திருவாளர் த. சி. முதலியார் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

சுன்னுகம், புலவரகம்
திரு. கு. அம்பலவாணபிள்ளையால் எழுதப்பட்டது

## தோற்றுவாய் :

புண்ணிய பூமியெனப் போற்றப்படும் ஈழநாட்டின் கண்ணே தூய செந்தமிழ் பேசப்படும் யாழ்ப்பாணத்தில் நீர்வள நிலவளத்தோடு கூடிய இயற்கை வனப்பும், பரம்பரைப் பெருமையும் ஒருங்கு பொருந்தப்பெற்ற கிராமங்கள் பலவுள. அவைகள் யாவற்றினும் பல்வகைத்தாய தலைசிறந்த பெருமைகளோடு விளங்குவது சுன்னுகமாகும். காலத்தில் இக்கிராமம் வளர்ச்சியடைந்து இன்று ஒரு நகரமாகக் காட்சியளிக்கின்றது. சுன்னைநகர் புராதன காலந்தொட்டுப் பாவலர், நாவலர், பண்டிதர், கவிராயர் என்போர்களுக்கும், உயர்குலப் பிராமணோத்தமர்களுக்கும், உயர்குடிச் சைவ வேளாண்மக்களுக்கும், உயர்ந்த பதவிகளை வகித்துவந்த உத்தியோகத்தர்களுக்கும், புகழுந் திறமை படைத்த வைத்தியர்களுக்கும் உறைவிடமாய் விளங்கிவந்த பெருமை யுடையது. மேலும் இந்நகரின் கண்ணே நித்திய நைமித்திய பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடந்துவரும் பூர்விகப் பெருமையோடு விளங்கும் பல சைவாலயங்களும் உண்டு.

## பிறப்பு :

இத்தகைய பெருமைகளையுடைய இச் சுன்னைநகரின் கண்ணே வைத்தியநாத முதலியார் பரம்பரையிற் ருேன்

றிய அகிலேசர் மகளுகும், முதலியாரின் புத்திரன் திரு. தம்பு அவர்களுக்கும், மண்டலநாயக முதலியார் வமிசத்தில் தோன்றிய திரு. அ. முத்துக்குமாரு அவர்களின் புத்திரி செல்லாச்சியம்மையாருக்கும் ஏக புத்திரனுகத் திரு. த. சி. முதலியார் அவர்கள் கரஅ ஆவணிமீ 18உ (3-9-1891) பிறந்தனர். இவர் தந்தையார் திரு. தம்பு அவர்களுக்கு மாணிக்கவாசகர் என்ற மறுநாமமும் உண்டு. மேலும் தம்பு அவர்களின் தாயார் மேற்படி முத்துக்குமாரரின் சகோதரியாரென்பதும் குறிப்பிடப்படலாம். செல்லாச்சியம்மையாரின் தந்தையாராகும் இம்முத்துக்குமாரர், இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் சுன்னுகத்தில் வாழ்ந்த முத்தமிழ் விரகர் முத்துக்குமார கவிராஜரின் தௌகித்திரன் (மகளது மகன்) ஆவர். இந்த முத்துக்குமார கவிராஜரவர்களே, அதிகார புருடராய்ச் சென்னையில் வாழ்ந்து தொல்காப்பியம் முதலிய அநேக பண்டைத் தமிழ் நூல்களை முதன் முதலாக அச்சிட்டு வெளியிட்ட பெருமையுடைய ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை B. A., B. L. அவர்களின் நற்றமிழாசிரியராவர். மேலும் இச் சுன்னையம்பதியில் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் தமிழறிஞராக விளங்கிய திரு. அ. குமாரசுவாமிப் புலவரவர்களின் தாதைதன் தாதையாகும் சின்னத்தம்பியார், இம் முத்துக்குமாரகவிராஜரவர்களின் சகோதரராவர்.

திரு. முதலியார் அவர்களின் தந்தையாராகும் திரு. தம்பு அவர்கள் அரசினரின்கீழ் வைத்தியராகக் கடமையாற்றி வருங்காலத்தில், 1905ஆம் வருடம் ஆடி மாதத்தில், மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் தேர்த்திருவிழாத் தினத்தன்று, காலஞ்சென்றனர். இளம் வயதிலேயே தந்தையார் காலஞ்சென்றனராகத் திரு. முதலியார் அவர்களை உரிய முறையிற் சீராக வளர்த்துக் கல்வி கற்பித்து நன்னிலைக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்புங் கடமை

யும் இவர் தாயார் செல்லாச்சியம்மையார் மேலாயது. இளமைப் பருவத்திலேயே தாயார் விருப்பப்படி இவர் சிவதீட்சையும் பெறலாயினர். மிகுந்த கடவுட் பக்தியும், சைவாசாரமும், நல்லொழுக்கமும் இயல்பாகவே அமையப் பெற்ற இவரது தாயார், இவரை நன்கு வளர்த்து நல் வழிப்படுத்துவதில் மிகவும் அக்கறை காட்டி வந்தன ராவர்.

**கல்வி :**

இவர் ஏற்ற பருவமடைந்ததும் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்றுத் தொடக்கத்தில் அக்காலத்தில் சுன்னு கத்தில் நிலைபெற்றிருந்த அமரிக்கன் மிஷன் தமிழ்ப்பாட சாலையில் சிறிதுகாலங் கல்வி பயின்றனர். பின்னர் ஆங்கிலக்கல்வி கற்கும்பொருட்டு மல்லாகம் ஆங்கில வித்தியாசாலைக்கு அனுப்பப்பட்டனர். இங்கு கீழ்வகுப்புக் களிற் கற்றுத் தேறியபின்னர் உயர்ந்த ஆங்கிலக்கல்வி கற்கும்பொருட்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் சேர்ந்து கல்வி பயின்றனர் அப்போது அக் கல்லூரியின் தலைமையாசிரியராகவிருந்தவர் திரு. நெவின்ஸ் செல்லத் துரை, B. A. அவர்களாவர். இயல்பாகவே மிக்க விவேக மும் கல்வி கற்பதில் மிக்க நாட்டமும் ஊக்கமும் பொருந் தப்பெற்றவராகும் திரு. முதலியார் அவர்கள் பரீட்சை களில் ஏற்ற காலங்களில் சித்தியடைவாராயினர்.

**உத்தியோகம் :**

பின்னர் அரசினரின்கீழ் உத்தியோகம் பெறும் நோக்கமுடையராய் அதற்கேற்ற சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி யிருக்கும்போது மயிலணிக் கந்தசுவாமி கோவி லுக்கு அண்மையில் சில சைவப்பெரியார்களின் முயற்சி யால், ஒரு சைவ வித்தியாசலை ஆரம்பிக்கப்பட்டது. அவ் வித்தியாசாலையின் தலைமையாசிரியராகவிருந்தவர் உடுவில் வாசரும், தமிழ்ப்பண்டிதருமாகிய ப்ரமஸ்ரீ வ. மு.

இரத்தினேஸ்வரஐயரவர்கள். திரு. முதலியாரவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித வேதனமும் பெருது இவ்வித்தியாசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றி, யாவர் நன்றியையும் பெற்றனராவர். இவ்வாறு கல்வி கற்பித்து வரும்போது இலங்கை யரசாங் கப் புகையிரதப் பகுதியிற் கடமையாற்றுதற்கு உத்தியோ கத்தர்களைத் தெரிவு செய்தற் பொருட்டு அரசினர் பரீட்சை யொன்று நடத்தினர். அப்போது திரு. முதலியா ரவர்களும் விண்ணப்பப்பத்திரம் அனுப்பிப் பரீட்சைக்குத் தோற்றினர். இப் பரீட்சை நடந்து சில மாதத்துள் அர சாங்கப் பொதுச் சுகாதாரப் பகுதியினரும் சுகாதார பரிசோதகர்களைத் தெரிவுசெய்தற் பொருட்டும் ஒரு பரீட்சை நடத்தினர். திரு. முதலியாரவர்கள் அப்பரீட்சை யையும் தவறவிடாது எடுத்தனர். இப்பரீட்சைகளை எடுத்த சில காலத்தினுள் புகையிரதப்பகுதியினர் நடத்திய பரீட்சையில் இவர் சித்தியடைந்தனராகத் தெரிவிக்கப் பட்டது. எனவே அப்பகுதியில் உத்தியோகம்பெற்று ஆறு மாதகால வரையில் கடமையாற்றிவரும்போது சுகாதாரப் பகுதியினர் நடத்திய பரீட்சையிலும் இவர் சித்தியெய்தின ராக அறிவிக்கப்பட்டது. சமூகசேவையில் மிக்க நாட்டங் கொண்டவராகும் திரு. முதலியாரவர்கள், முன்னர் தாம் ஏற்று நடாத்திவந்த உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு அரசினரின்கீழ் பொதுச் சுகாதாரப் பரி சோதகராக 1915ஆம் வருடம் சேர்ந்து கடமையாற்றுவாரா யினர் இவர்கடமையாற்றிய இடங்களிற் சில: திருக்கோண மலை, சுன்னுகம், களுத்துறை, கடுகண்ணவை, கட்டானை, டெமென்கந்திய, சீதுவ, அச்சுவேலி, ஏழாலை, அனுராத புரம் என்பன. உத்தியோகம் நடாத்திய இடங்களிலெல் லாம் அங்கங்கு வாழ்ந்த மக்களுடன் இணங்கி நட்புடன் வாழ்ந்து தமது கடமையையும் எவ்வித குறையுமின்றிப் புரிந்து வந்தனராவர். இன்றும் இவருடன் நட்புறவு பாராட்டி வந்தவர்கள் சிலர் அவ்விடங்களில் வாழ்ந்து

வருகின்றனர். மேலும் தமிழ் ஆங்கில வறிவுடன் சிங்கள மொழியையுங் கற்று நன்கு சம்பாஷிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தமையால், இவர் எல்லா விடங்களிலும் எவ் வித கஷ்டமுமின்றி மக்களுடன் நெருங்கிப் பழகித் தமது கடமையைச் சிறப்பாக ஆற்றும் வன்மையைப் பெற்றிருந் தனர் என்பாம்.

மேலும் இவர் விசேட ஊக்கத்துடன் திறம்பட நன்கு கடமை புரிந்து வந்தமையால் சுகாதாரப்பகுதியினர் இவர் மாட்டு நல்லெண்ணமும் நன் மதிப்பு முடையவராக விருந்தனர். அக்காலத்தில் உவாந்திபேதி (Cholera), கொள்ளைநோய் (Plague), அம்மை (Smallpox), பொக் குளிப்பான், நெருப்புக்காய்ச்சல் முதலிய தொற்றுநோய்கள் இலங்கையின் பல பாகங்களில் தோற்றுவதும் பரவுவதும் வழக்கமாயிருந்தது. அப்போதெல்லாம் சுகாதாரப் பகுதி யினர் இவரை விசேடமாக அழைத்து இவர் தலைமை யில் பரிசோதகர்களை அவ்வவ்விடங்களுக்கு அந்நோய்கள் பரம்பாது தடுக்க அனுப்புவது வழக்கம். இத் துறையிற் கடமையாற்றிச் சித்தியடைவதில் இவர்க்கு மிக்க அனுபவமுண்டு. வைத்திய சுகாதாரப் பகுதியின் பிரதம தலைவராக முன்னர் கடமையாற்றிய காலஞ்சென்ற டாக்டர் S. F. செல்லப்பா அவர்கள் இவர்மாட்டு மிக்க நட்பும் மதிப்புமுடையராக விருந்தமை யாவரும் அறிந்த விஷயமாகும்.

## விவாகப் பேறு:

உத்தியோகம் பெற்று ஐந்து வருடஞ் சென்ற பின்னர், அதாவது 1920ஆம் வருடம் சித்திரைமாதம் இவருடைய விவாகம் நிகழ்வதாயிற்று. அப்போது இவருக்கு வயது இருபத்தெட்டாகும். தனது சொந்த மாதுலரும், மண்டலநாயக முதலியார் வழித் தோன்றலும், சுன்ஞகம் கிராமாதிகாரியாகக் (Police Vidhane) கடமை

புரிந்து வந்தவருமாகிய திரு. மு. திருவம்பல மவர்களி னதும், ஸ்ரீமதி பொன்னம்மையாரினதும் ஏக புத்திரி யாகிய ஸ்ரீமதி விவேகசிந்தாமணியம்மையாரை இவர் தமது வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொண்டனர். இவருடைய விவாகம் வழக்கம் போல் சைவச்சம்பிரதாய ஒழுங்கின்படி நடைபெற்றதன்று. இவரது தாயாராகும் செல்லாச்சியம்மையார் விருப்பப்படியே அவர் இல்லத் தில் கடவுள் வழிபாட்டுடன் மாங்கல்யதாரணம் நிறை வேறியது. பின்னர் தம்பதிகளாகி இருவரும் மிக்க ஐக்கியமாக வாழ்க்கையை நடாத்திவருங் காலத்தில் இவர்களுக்கு முதல் ஒரு புத்திரியும் பின்னர் ஓர் புத்திர னும் பிறந்தனர். புத்திரியார் தெய்வநாயகியம்மையார் 1921 ஆம் வருடம் புரட்டாதி மாதம் பிறந்தனர். புத்திரன் மாணிக்கவாசகர் 1926ஆம் வருடம் ஆடி மாதம் பிறந்தனர் தெய்வநாயகியம்மையார் மயிலணிச் சைவவித்தியாசாலை யிலும் இராமநாதன் கல்லூரியிலும் கல்விபயின்று தேர்ச்சி யடைவாராயினர். புத்திரனாகும் மாணிக்கவாசகர் ஆரம் பத்தில் மயிலணிச் சைவவித்தியாசாலையில் பயின்று பின்னர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் கல்வி கற்றுவரும்போது (1943) அக்கல்லூரி மாணவ ருடன் உல்லாசப் பிரயாணத்தில் (Tour) சென்றபோது திருகோணமலைக்குஞ் சென்றனர். அங்கு மாணவருடன் நீராடும்போது ஆழ்கடலில் அமிழ்ந்திச் சங்கடப்படுங்கால் ஒருவாறு மீட்கப்பட்டனர். சொந்தவூருக்குக் கொண்டு வரப்பட்டும் அதன் காரணமாகத் தோன்றிய சுவாச நோய்க்காளாகி இவர் அகால மரணமடைந்தனர். இவரின் பிரிவு இக்குடும்பத்தினர்க்கு மிக்க திகைப்பை யும் மனமாற்றத்தையும் உண்டாக்கியது திரு. முதலி யாரின் வாழ்க்கையிற் புதியவோர் திருப்பம் ஏற்பட்ட தென்றுங் கூறலாம். ஆடம்பர வாழ்க்கையில் வெறுப் புடையராய் முன்னரிலும் கடவுட் பக்தியுடையராய்த் தாழ்மையுடன் உத்தியோகத்தை நடாத்தி வந்தனர்.

இவருடைய புத்திரி தெய்வநாயகியம்மையாரே இப்போது இவரின் ஒரே கிளைகளுயினர். இவருக்குச் சிறந்தவோர் கணவனைத் தேடிப்பெற்றுச் சைவாசாரப்படி 1945ஆம் வருடம் கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி விவாகத்தை நிறைவேற்றிவைத்தனர். மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கொல்லங்கலட்டி விசுவநாதமுதலியார் வழித்தோன்றலாகும் திரு. க வைரவப்பிள்ளையினதும், தண்டிகை முதலியார் வழித்தோன்றலாகிய ஸ்ரீமதி சிவகாமியம்மையாரதும் புத்திரனும், கொழும்பு நகரில் அப்போது வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் போஷாத்து மதிப்பீடு (Nutrition Survey) நடாத்தி வந்தவருமாகிய திரு. சுப்பிரமணியமவர்களே இவ்வம்மையாரின் வாழ்க்கைத் துணைவராயினர். இவர்கள் ஒற்றுமையாகச் சகல செல்வங்களோடும் இல்லறம் நடாத்திவருங் காலத்தில் முதல் ஒரு புத்திரனும் பின்னர் ஒரு புத்திரியும் பிறந்தனர். புத்திரனுகும் ஸ்ரீஸ்கந்தராஜா கல்விகற்றுப் பரீட்சைகளில் தேர்ச்சியடைந்து இப்போது கொழும்பு R. S. நடராஜா ஸ்தாபனத்தார் நடத்திவரும் நிலையத்தில் கணக்காய்வாளராகப் பயின்றுவருகின்றனர். செல்வி தேவராணியம்மையார் வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தரக்கல்வி பயின்றுவருகின்றனர். திரு. முதலியார் அவர்களுக்கு மகள், பேரப்பிள்ளைகள், மருமகன் ஆகியோர்மாட்டு அளவுகடந்த நம்பிக்கையும் விசுவாசமுமுண்டு. பேரப்பிள்ளைகளை மிகவும் நேசித்து வந்ததுமன்றி அவர்களது கல்வி விருத்தியிலும் நல்வாழ்விலும் விசேட அக்கறைகாட்டி வந்தனர். மருமகனையும் மிகக் கணிசமாக மதித்து அன்பாகவும் ஆதரவாகவும் அவரை நடாத்திவந்துள்ளார்.

### உற்ருர் உறவினர் :

திரு. முதலியார் அவர்களுக்கு நெருங்கிய சுற்றத்தார்கள் சுன்னுகத்தில் மாத்திரமன்று மல்லாகம், தெல்லிப்

பழை, மயிலிட்டி முதலிய ஊர்களிலும் பலர் உண்டு. இவருக்குச் சின்னுச்சியம்மையார் எனப்படும் ஒரே யொரு சகோதரியார் உளர். இவர் முதலியாரின் மைத்துனர் (மனைவியின் தமையனார்) திரு. நவரத்தினம் அவர்களையே விவாகஞ் செய்தனராவர். மலாயாவில் உத்தியோகம் நடாத்தி வந்த இவர் சிறிது காலத்துள் சிவபதமடைந்துவிட்டனர். இவர்களுக்குச் செல்வநாயகி யம்மையார் என்னும் ஒரேஒரு புத்திரியார் உண்டு. இவ் வம்மையார் சங்கானை இராஜவல்லப முதலி மரபினரும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியராகவிருந்து இப்போது காலஞ்சென்ற வருமாகிய திரு. ச. சேதுகாவலர் M. A. (Ceylon), B. A. (London), Dip-in-Education (Ceylon) அவர்களை உரிய பருவத்தில் விவாகஞ் செய்து இரண்டு புத்திரர்களையும் மூன்று புத்திரிகளையும் உடையராய் வாழ்ந்து வருகின்றனர். இவருடைய மூத்த புதல்வன் செல்வன் இராசவல்லபன் என்பவர் இலங்கைச் சர்வகலாசாலையில் கல்விகற்று B. Sc. பட்டம் பெற்று, இப்போது காலி நகரில் ஆசிரியராகக் கடமையாற்றிவருகின்றனர். திரு. முதலியார் அவர்கள் தமது சகோதரியாரின் குடும்பத்தி னர் மாட்டு அன்பும் ஈடுபாடுமுடையர். அவர்களுக்கு வேண்டிய போதெல்லாம் மிக்க உதவிபுரிந்து வந்தனர் திரு. முதலியாருக்கு முன்னர்க் கூறிய திரு. நவரத்தினத் துடன் திருவாளர்கள் முத்துக்குமாரு, திருச்சிற்றம்பலம், இளையதம்பி, சிதம்பரநாதன் என்ற மைத்துனர்கள் (மனைவியின் சகோதரர்கள்) உண்டு. இவர்களில் இப் போது சீவந்தரராயிருப்பவர் திருவாளர்கள் திருச்சிற்றம் பலம் அவர்களும் சிதம்பரநாதனுமே. திருச்சிற்றம்பலம் அவர்கள் நீண்டகாலம் மேர்க்கென்ரையில் வங்கியில் கடமையாற்றி இப்போது இளைப்பாறி வாழ்ந்துவருகின்

றனர். திரு. சிதம்பரநாதன் மலாயாவிலே உத்தியோகம் வகித்துக் குடும்பத்தினருடன் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

## பொதுத் தொண்டுகள் :

திரு. முதலியார் அவர்கள் தமது அறுபதாம் வயதில் இளைப்பாறிய பின்னரும் வாளாவிருக்கவில்லை. பொது மக்களினது நன்மைக்குரிய பொதுப்பணிகளில் ஈடுபட்டு மிக்க ஆர்வத்துடன் உழைத்து வந்தனரெனலாம். "அரசாங்கத்திற் கடமையாற்றிப் பின்னர் இளைப்பாறிய உத்தியோகத்தரின் பிற்கால சகாய சங்கம்" என்ற நாமத்தோடு கண்டி நகரை மத்திய நிலையமாகக் கொண்டு டாக்டர் S. F. செல்லப்பா அவர்களின் தலைமையில் ஓர் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் அநேக இளைப்பாறிய உத்தியோகத்தர் அங்கத்தவர்களாகச் சேர்ந்து வந்தனர். அதன் கிளைச்சங்கமொன்று திரு. முதலியாரவர்களைத் தலைவராகக் கொண்டு சுன்னாகத்தில் நிறுவப்பட்டது. அநேக இளைப்பாறிய உத்தியோகத்தர்களை அதிற் சேரச்செய்து பயனடைய வழிகாட்டினர். மேலும் பிரதானமாகச் சைவசமய விருத்திக்குரிய வைபவங்கள், தொண்டுகள், விழாக்கள் என்பனவற்றோடும் நெருங்கிக் கலந்து விசேட ஆர்வத்துடன் உழைத்து வந்தனர். இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் சுன்னாகம் மயிலணிச் சிவன்கோயிலில் சுக்கிரவாரந்தோறும் நிகழ்வதாய்க் கூட்டுப்பிரார்த்தனையும் விழாவும் ஆரம்பிக்கப்பட்டபோதும் பின்னரும், அவைகள் தொடர்ந்து செவ்வனே நடைபெற மற்றைய அபிமானிகளுடன் ஒத்துழைத்து வேண்டிய உதவிகள் புரிந்துவந்தனர். மேலும் மேற்குறித்த ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலங்களில் நிகழும் எட்டாம் நாள்விழா இவரதும் இவர் குடும்பத்தினரதும் உபயமாகவே பல்லாண்டுகளாக நடத்தப்பட்டு

2

வருகின்றது. இவைகளோடு, தெய்வீகவாழ்வு வாழ்ந்து வந்த இவரது தாயார் செல்லாச்சியம்மையார் சிவபத மடைந்த புனிததினமாகும் தைமாத அசுவினிப் பெரு நாளில் சுன்னுகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் குருபூசையுடன் விநாயகப் பெருமானுக்கு அபிடேகம் விசேட பூசைகளும், அடியார்களுக்கு அன்னதானமும் சிறப்பாக நடத்தப்படுதற்கு வேண்டிய ஒத்தாசைகளும் உதவியும் அளித்துவந்தனர். மயிலிட்டியிலுள்ள பூத ராயர் கோயிலின் கண்ணும் இவரும் இவர் குடும்பத்தி னரும் சென்று வழிபாடுகள் பூசைகள் தவறவிடாது வருடந்தோறும் செய்வது வழக்கமாகும்.

## குணமாண்புகள் :

திரு. முதலியாரவர்கள் மாட்டுப் பொருந்தியிருந்த நற்குணங்கள் மாண்புகள் பலவாகும். விரோதங் கொள்ளாது பொதுவாக எல்லாரோடும் இணங்கிச் சந்தோஷமாக வாழும் இயல்புடையவர். பொருமை வஞ்சகம், கபடம் என்பனவற்றைக் கண்டறியார். எல்லோருந் தம்மைப்போல வாழவேண்டும் என்ற மனப் பான்மை யுடையவர். ஏழைகளுக்கும் மற்றுந் தேவைப்பட் டோர்க்கும் உதவி புரிவதில் என்றும் ஆயத்தமாயிருந்த வர். மனைவி மக்கள், பேரப்பிள்ளைகள், மருமகன் முதலி யோரிடத்தும் அளவுகடந்த நேசமுடையவர். கடவுளில் மிக்க நம்பிக்கையும் பக்தியு முடையவர்.

## இறுவாய் :

இவ்வாருகச் சகல சௌகரியங்களுடன் எவ்வித குறையுமின்றி நல்வாழ்வு வாழ்ந்துவந்த திரு. முதலியார் அவர்களுக்கு இருந்தாப்போல் எவரும் எதிர்பாராத முறை யில் பரகதிப் பேறுவந்தெய்தியது. நோய்வாய்ப்பட்டு நீடித்துப் படுக்கையிற் கிடந்து வருந்திஞரில்லை. வழக்கம்

போலவே தமது அலுவல்களைத் தாமே செய்துவந்தனர். சென்ற கீலகஸு பங்குனிமீ 20உ (2-4-69) புதன் கிழமை இரவு உணவருந்தியபின் வீட்டிலுள்ளாருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றனர். சிறிது நேரத்தின் பின் ஏதோ சிறிது அசௌக்கிய முடையவராகக் காணப்பட்டனர். உடம்பின் கண் ஏதோ வித்தியாசம் இருப்பதாகக் கூறினர். அப்படி யிருந்தும் எல்லோருடனும் நன்கு சம்பாஷித்தபடியே யிருந்தனர். பன்னிரண்டு மணியளவில் தம்முடைய வாழ்வுக்கு எல்லைவந்துவிட்ட தாகக் குறிப்பாகப் பக்கத்தில் நின்றோர்க்கு உணர்த்தினர். அவ்வளவுந்தான். இவருடைய ஆன்மா பரகதியடையலாயிற்று. இப்படிச் சடுதியாகத் தம்மை விட்டுப் பிரிவாரென்று சிறிதும் எதிர்பாராத இவரது மனைவி, மகள், பேரப்பிள்ளைகள், மருமகன் என்போரும் மற்றும் உறவினரும் ஆழ்ந்த துயர்க் கடலில் மூழ்குவாராயினர். புதவாரமும், பூரணையும், அத்த நட்சத்திரமுங் கூடிய புண்ணிய வேளையில், ஐம்பது வருடங்கள் வரையில் இல்லற வாழ்வு சிறப்பாக நடாத்திச் சந்தோஷமாக வாழ்ந்துவந்த திரு. முதலியாரவர்கள் தமது எழுபத்தேழாவது வயதிற் காலமாயினர். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

சுபம்.

உ

சிவமயம்

# திரு. த. சி. முதலியார் அவர்களின்

பேரிற் பாடிய

# இரங்கற் பாக்கள்

## வெண்பா

ஆண்டுநற் கீலகத்தி லார்பங் குனிமதியம்
பூண்டுவளர் பூரணையை யுற்றபுதன்—மாண்குணங்கள்
தங்குபுகழ்ச் சின்ன முதலியார் தாம்மறைந்து
நங்கையரன் தாளடைந்த நாள்.

## விருத்தம்

செப்புபுகழ் சேர்வைத்ய நாதரெனத்
திகழ்முதலி வழியில் வந்தோன்
ஒப்பிலா மகிமையுறு தம்புவெனும்
உயர்குணஞ்சார் உதய பானு
அப்பணிசெஞ் சடையண்ணல் தனைத்தினமும்
போற்றுமுயர் அன்பின் மிக்கான்
இப்புவியில் செல்லாச்சி யம்மையுடன்
இல்லறத்தில் இயைந்து வாழ்ந்தே.

போற்றும்அறம் உருவாகி வந்ததென
அவதரித்த பொற்பின் மிக்கான்
சாற்றுசின்ன முதலியார் எனுநாமம்
தாரணியில் தாங்கா நின்றே
ஆற்றலுறும் சுகாதார பரிசோதக
ராம்பதவி அமையப் பெற்றே
நாற்றிசையும் புகழ்பரவ நாவல்லோர்
தினமேத்த நயந்து வாழ்ந்தோன்.

செல்லாச்சி யம்மையார் சிறந்தகுரு
பூசைதனைத் திகழும் தையில்
மல்குமச்சு வினிநாளில் மாட்சிமைசார்
அடியார்கள் தாமுஞ் சேரச்
சொல்சுன்னை வி நாயகர்தளியில் தூய்மையுடன்
நடாத்தியநற் தோன்ற லானேன்
எல்லவர்க்கும் எந்நாளும் இயைபணிகள்
தான்புரிந்தே இன்ப முற்றேன்.

பன்னுமுயர் பயன்மரம்போல் பலர்குறையும்
தான்போக்கிப் பண்பின் மிக்க
சுன்னுகம் தன்னிலமர் சிவன்றலத்தே
பிரார்த்தனைசெய் தொண்டர் கூட்டம்
தன்னுடனே சேர்ந்துதினம் தகுசேவை
தான்புரிந்த தக்கோ னம்மா
இந்நாளில் இறைவனடி சேர்விருப்பால்
எய்துடலம் நீத்தான் காணே.

## புலம்பல்கள் (பொது)

குன்று மணிவிளக் காமெம் முதலியா ராம்மகிபா
பொன்றுத் துணையெனப் பூதலத் தும்மை நினைந்திருப்பச்
சென்றே மறைந்தனை சேர்கயி லைப்பதி சேர்ந்தனையால்
என்றே உனதெழில் கண்டிங் குளமகிழ் வெய்துவமே.

## மனைவி புலம்பல்

அன்பின் பெருக்கே யருநிதியம் தான்தேடி
இன்பமுடன் வாழ்ந்திருந்த என்துணைவா—இந்நாளில்
என்ன குறைகண்டீர் ஏதுதுயர் தானடைந்தீர்
என்னே டெனைப்பிரிந்தீ ரின்று.

## மகள் புலம்பல்

பெற்றே வளர்த்துப் பெருநிதியம் தானளித்து
உற்றநல் வாழ்வில் உறுவித்தீர்—மற்றுலகில்
காற்றுய் மறைந்துநீர் காசினியை விட்டகலச்
சாற்றுகுறை யாவுளவோ தான்.

## மருமகன் புலம்பல்

பெற்றதந்தை போலவே பேரன்பு தான்காட்டி
மற்றுறவு கொண்டவென் மாமாவே—பற்றின்றி
என்னே யெனைமறந்தீர் எங்குதான் சென்றடைந்தீர்
என்றே வருவீர் இனி.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்பினுடன் பேணியெமை யாடையணி தானளித்தே
இன்பமுடன் வளர்த்தி ரிங்கிலத்தே—பின்னுளில்
அப்பப்பா என்றிங்கு யாரையினி நாமழைப்போம்
எப்போது காண்பதுமை யீங்கு.

## சுற்றம் புலம்பல்

எங்கள் முதலியாரே என்றுநாம் வந்தவுடன்
தங்குறை போக்கியெமைத் தாங்கினீர்—இங்கினியார்
உன்ற னிருள்கிளைக்கு உற்றதுயர் போக்கிடுவார்
என்றுமைக் காண்போ மினி.

## தேற்றம்

சின்ன முதலியாரும் சேருடலம் விட்டகன்ருர்
என்னேகாண் ஏங்கி இரங்குகின்றீர்—பன்னும்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்ருர் யார்.

பண்டிதர் ப்ரமஸ்ரீ ப. சிவாநந்தஐயர்
பன்ஞலை, தெல்லிப்பழை

# T. S. MUDALIYAR

*A Brief sketch (by a close relation)*

DR. C M. VANNIASEGARAM, Rtd. S. H. S.

T. S. Mudaliyar was born in an ancient and orthodox Hindu family at Chunnakam with a silver spoon in his mouth. His early life was colourful and spent in the luxury of all good things in life in milk and honey surrounded by heaps of fond relations and servants and in a good Hindu atmosphere. He grew up in the lap of a sweet faced, sweet voiced angelic mother who lavished on him everything he needed. His mother later became the universally revered and respected Chellachchi ammiar who was also closely associated with the late revered Yogar Swami. Crowds elite and poor swarmed her premises to be in her saintly presence worship her and obtain her grace.

The pampered child grew up into a dashing young man and is said to have dazzled the eyes of several young damsels in the area with his tweed suits riding a brand new motor bike. Marriages are made in heaven, and sometimes even in the country. The country folk naturally tied him up with his eminently eligible maternal cousin. "Whom else could he marry?" He however let the idea dangle in the air till more and more girls set eyes on him and the cousin and her father grew more and more anxious. He finally accepted his cousin Vivekachinthamanypillai on the advice of his mother.

Easy going and comfortably placed young Mudaliyar had no ambition to be a Doctor, Engineer or Lawyer,

although his father was an apothecary. Those days crowds of young men sat for the clerical, railway, excise, sanitary and such examinations as a routine, got well married and lived comfortably. Mudaliyar having got through the railway and sanitary learners examinations almost at the same time sat in the Railway office for a short while and left it to become a sanitary learner. Perhaps what induced him for the latter choice was a motor bike from her fond mother.

As a sanitary officer he was soon marked for his zeal and efficiency. The late Dr. Chellappah who revolutionized the Health Services structure picked him as his handy-man to build up the Kalutara Training Centre This Centre became the cynosure of South East Asia and Mudaliyar contributed to it in no small measure. When cholera epidemic broke out in Trinco—Batticaloa area in 1924, Mudaliyar was the first choice. Dr. Chellappah was in command, Dr. C. T. Williams in charge of the campaign at Kathiraveli and the writer in charge of treatment. Mudaliyar did yeomen service in rounding up patients and contacts over a wide area getting them sent to the camp and bringing the epidemic to a speedy control. He took great personal risk in going about the villages where the disease was rampant. He was highly commended for his work. There were no special posts or plumps in the sanitary officers service those days and Mudaliyar had to be satisfied with 'COMMENDATIONS' and the choice of good stations. He served in Stations like Negombo, Trinco, A'Pura, Kadugannawa and when his health got impaired he was allowed to work from his own home at Chunnakam. Dr. Chellappah and later Dr. C. T. Williams did not lose their love and regard for him as an efficient officer, till the end.

The glow of life began to dim in later years. His only son met with a tragic end. His eye sight and general health got impaired. The husband of his only daughter, also a P. H. I. had to retire on account of ill health. In spite of these he kept up a bright home and good cheer to the end which came in a peaceful manner.

As a close kinsman and doctor he used to frequently contact me. He had a good and kind heart to everybody and bore his difficulties cheerfully. He was never in need and kept up his dignity and independence to the end.

# T. S. MUDALIYAR

## AN APPRECIATION

*by*

**V. M. Cumaraswamy**, *District Judge, Mallakam*

It is said that some are born great, some achieve greatness, some have greatness thrust upon them. The late Mudaliyar belonged to the first category.

He was born in a leading and respected family from Chunnakam. He was doubly fortunate that he was the son of the great pious Lady Sellachiammah, the Sage of Chunnakam, respected by Yogar Swami.

Mudaliyar had a commanding and charming personality and was the most popular figure at Chunnakam. He was an excellent conversationalist and was full of anecdotes. He, by his simple and pleasant ways endeared himself to one and all. He made himself accessible to everyone who wanted his company. Even a small child was happy in his company. He treated him as his equal and made him feel comfortable. He had a natural knack of making people comfortable and happy in his company.

He served as Public Health Inspector in many parts of the Island and wherever he served, he was loved and respected and fondly remembered.

He was a great host. Though himself a strict vegetarian and teetotaller, he entertained his guests most lavishly. He used to recall with pride how at Trincomalie, in his early days, he entertained in grand style two of Jaffna's famous lawyers H. A. P. Sandrasegara K. C. and

S. D. Tampoe, when they went there for a case; and how deeply beholden they were to him for his great hospitality.

The only fault Mudaliyar had, if fault it was, was that he was a great chain smoker. He enjoyed his smoke even to the very last moments of his life.

His voice is now stilled. No more could we hear him narrate his pleasant stories. But his memory will be evergreen for we have not another like him here.

May his soul rest in Peace.

Om Shanti, Shanti.

# திரு. தம்பு சின்ன முதலியார்

ச. அம்பிகைபாகன், B. A.
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயம்)

திரு தம்பு சின்ன முதலியார் சைவாசாரத்திற் சிறந்த ஒரு பிரபல்ய குடும்பத்தில் தோன்றினர். இவருடைய தந்தையார் முதலியார் தம்பு என்பவர், வைத்தியத் துறையில் கடமையாற்றி இளம்வயதில் சிவபதமடைந்து விட்டார். இவருடைய தாயார் சுன்னுகம் செல்லாச்சி அம்மையார் சிறந்த சிவஞானியாக விளங்கி தமது குடும்பத்துக்கு மாத்திரமல்லாமல் தாம் பிறந்த நாட்டுக்கே பெருமையைத் தேடிக்கொடுத்தவர். இவருடைய தாய் மாமனும் மனைவியின் தந்தையாருமாகிய திருவம்பலம் என்பவர் கிராமவிதானையாராக இருந்ததோடு தமது உறவினர்க்கெல்லாம் தலைவராக விளங்கினர்.

நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்தகாலந் தொடங்கி திரு. முதலியாரின் தாயாரின் வீட்டுக்குப் போவது வழக்கம். அவர்கள் எங்கள் நெருங்கிய உறவினர் என்ற முறையிற் போவோம். இதற்கு மேலாக அங்கு நடைபெறும் பூசைகளைக் காண்பதற்காகவும், அவர்களிடம் வரும் பெரியோர்களைத் தரிசிப்பதற்காகவும் போவோம்.

அங்கு வருபவர்களில் முக்கியமானவர் கொழும்புத் துறை யோக சுவாமிகளாவர். சுவாமிகளிடம் திரு. முதலியார் பெருமதிப்பு வைத்திருந்தார். தாயார் சிவபதமடைந்த பின்னர் சுவாமிகளுடன் கலந்தாலோசித்தே முக்கிய கருமங்களைச் செய்வர்.

செல்லாச்சி அம்மையார் மகாசமாதியடைந்த பொழுது திரு. முதலியார் ஊரிலில்லை. சில அன்பர்கள்

சேர்ந்து அம்மையாரைச் சமாதிவைக்க ஒழுங்கு செய்து விட்டனர். சுவாமிகளுக்கு இது உடன்பாடில்லை. தாம் இவ் வைபவத்திற் கலந்து கொள்வதில்லையெனக் கூறி விட்டு, தமது ஆச்சிரமத்துக்குச் சென்றுவிட்டனர். மறுநாட் காலை திரு. முதலியார் வந்ததும், முதற்கருமமாகச் சுவாமிகளைச் சென்று தரிசித்து, அவர்கள் விருப்பப்படியே கிரியைகள் நடைபெறுமென்று கூறினர். பின்னர் சுவாமிகள் விருப்பப்படியே அம்மையாரின் பூத உடல் தகனஞ் செய்யப்பட்டது.

திரு. முதலியார் தமது தாயாரின் ஞாபகத்தை நிலை நாட்டுவதற்குப் பேருதவி புரிந்தார். அவர்களின் குரு பூசையை முன்னின்று நடாத்தி வைத்தார். சுன்னுகம் பட்டினசபை, அம்மையார் இல்லத்துக்குப் போகும் தெருவுக்கு அம்மையாரின் பெயரை வைக்கத் தீர்மானித்த போது அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.

திரு. முதலியார் தமது குடும்ப முன்னேற்றத்திலும் தமது சகோதரியாரின் குடும்ப முன்னேற்றத்திலும் அதிக கவனஞ் செலுத்தினர். பேரப்பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக அதிக பிரயாசை எடுத்தனர்.

பூரண வாழ்வு வாழ்ந்த இவரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போமாக.

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றேன் உனதருளான்
திருவாய் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும்
சேவடி போற்றி என்ன.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமல்
குத்திரங் கோள்களவு
கல்லாமல் கைதவரோ டிணங்காமல்
கனவிலும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல்
தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வந் தருவாய்
சிதம்பர தேசிகனே.

## தாயுமானசுவாமி பாடல்

கல்லால் எறிந்துங்கை வில்லால் அடித்துங் கனிமதுரச்
சொல்லால் துதித்தும்நற் பச்சிலை தூவியுந் தொண்டரினம்
எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நானினி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே.

தாயினு மினிய நின்னைச் சரணென்று அடைந்த நாயேன்
பேயினுங் கடையன் ஆகிப் பிதற்றுதல் செய்தல் நன்றோ
தீயிடை மெழுகாய்நொந்தேன் தெளிவிலேன் வீணேகாலம்
போயின தாற்று கில்லேன் பூரணா னந்த வாழ்வே.

## திருமந்திரம்

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

வ ம்

வைத்தியநாத முதலியார்

அகிலேசர்

முதலியார்

முத்
(O

பெரி

செல்லாச்சி அம்மையார்

திருவ
(Village H

தம்பு
(Apothecary)

சின்னச்சிப்பிள்ளை

முதலியார்
(P. H. I.)

சின்னச்சிப்பிள்ளை

நவரத்தினம்
(Clerk)

செல்வநாயகி
&
சேதுகாவலர்
(Principal)

இராஜவல்லவன்
(Teacher)

செல்வகௌரி
(University,
Peradeniya)

விபுலானந்தன்
(Tec. Jaffna)

ஆனந்தகௌரி
(G. C. E.
Ad. level)

தெய்வநாயகி
&
சுப்பிரமணியம்
(P. H. I.)

மாணிக்கவாசக

சிறீஸ்கந்தராஜா
(Audit Apprentice)

தேவராணி
(G. C. E. Ad. level)

# வம்சாவளி

மண்டலநாய

அப்புக்கு
&
முத்துக்கவிரா

முத்துக்குமாரு
(Overseer)
&
பெரியபிள்ளை

சின்னப்பர்
(Physician)

செவ்வந்திநாதர்

திருவம்பலம்
(Village Headman)

கதிராசிப்பிள்ளை

சின்னத்துரை

ஐயாத்துரை
(Health Officer, Ma

சிப்பிள்ளை

செல்லம்
&
சீனிவாசகம்

பொன்னுப்பிள்ளை

பர

வரத்தினம்
(Clerk)

விவேகசிந்தாமணிப்பிள்ளை

முத்துக்குமாரு
(Estate Supdt., Mala
&
சிவபாக்கியம்

சிவகுமாரன்
(Cinemas Ltd.
Accounts)
&
சீதாதேவி

விபுலானந்தா

திருக்குமாரன்
(Business)
&
பூமணி

தேவகுமா
(Cinemas
Account

னந்தகௌரி
G. C. E.
d. level)

ஜெயகௌரி
(G. C. E.)

மாணிக்கவாசகர்

பாலச்சந்திரா
(G. C. E.)

நவரத்தினம்
(G. C. E.)

செல்வ
(Junior Clerk

நாயக முதலியார்

புக்குட்டியார்
&
விராயரின் மகள்

நாகமுத்துப்பிள்ளை

தங்கப்பிள்ளை

ரை
Malaya)

பராபரை

மாரு
Malaya)

பம்

திருச்சிற்றம்பலம்
(Merc. Bank Clerk)
&
நகுலாம்பிகை

இளையதம்பி

சிதம்பரநாதன்
(Estate Supdt., Malaya)
&
இராசம்மா

குமாரன்
nas Ltd.
ounts)

திருமகள்
&
திருநடராஜா
(Med. Lab.
Technologist)

றகுலன்

னம்
E.)

சீவரத்தினம்
(G. C. E.)

தங்கராணி
(G. C. E.)

யோகரத்தினம்
(Student)

செல்வராணி
Clerk, Malaya)

தேவி
(Student)

சந்திரா
(Student)

விஜயபாரதி
(Student)

செல்வி
(Student)

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — உ 91-4/68